**தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகம் / கச்சேரி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் மற்றும் 2 ஆம் பந்தியில் மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியிலிருந்து தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

---

(அ) மன்னார் நகரம்

(ஆ) நானாட்டான்

(இ) முசலி

(ஈ) மாந்தை மேற்கு

(உ) மடு

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 25 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மாவட்டச் செயலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 291.55 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 257.88 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி தேறிய நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 33.67 மில்லியன் அதாவது 12 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவின விபரங்கள் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | மொத்தத் தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 170.60 | 158.76 | 11.84 | 7 |
| மூலதனம் | 120.95 | 99.12 | 21.83 | 18 |
| மொத்தம் | **291.55** | **257.88** | **33.67** | 12 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 19 அமைச்சுக்களிலிருந்தும் 16 திணைக்களங்களிலிருந்தும் முறையே ரூபா 1,360.6 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,119.7 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி சேமிப்பானது கிடைத்த மொத்த நிதிஏற்பாடுகளில் ரூபா 240.9 மில்லியன் அதாவது 18 சதவீதம் ஆக இருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 26501 | 12.00 | 11.30 | 6.00 | 8.61 | 50.00 | 38.10 |

### 2.3 கட்டுநிதிக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 7002/0000/00/0283/0014/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 24.98 மில்லியன் தொகை ஆகும்.

### 2.4 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 6003/0000/00/0041/0000/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 98.73 மில்லியன் தொகை ஆகும்.

### 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், மன்னார் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3.1 தொடக்கம் 3.10 வரையான பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகம் / கச்சேரி

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் ஏனைய சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| அடியிதழ்சேர் புத்தகங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 341 | முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| மின் பொருத்துக்களுக்கான இருப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 | முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 37 சதவீதத்திற்கும் 62 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) செலவின விடயம் 1401 இன் கீழ் ரூபா 100,000 மொத்த தேறிய நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 7002/0/0/283/14 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் படி செலவு மீதி பூச்சியமாக இருந்த போதிலும் திறைசேரிப் புத்தகத்தின் படி செலவு மீதி ரூபா 24,976,009 ஆக காண்பிக்கப்பட்டதுடன் வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம், இரண்டு வருடங்களிற்கு மேலாக இருக்கின்ற ரூபா 2,839,458 தொகையான 22 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

மரணித்த, ஓய்வுபெற்ற, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் இடைநிறுத்தப்பட்ட 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 1998 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 1,088,069 நிலுவை மீதிகள் தொடர்பில் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கோ அல்லது சீராக்கங்கள் மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2000 யூன் 12 ஆந் திகதிய ஐஏஐ/2000/1 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒவ்வொரு மூன்று மாதங்களில் ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மூன்று கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றிருந்தன.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் விளைவற்றோ அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டோ இருந்தன என அவதானிக்கப்பட்டது.

| **சொத்தின் வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலப்பகுதி** |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 09 | 03 வருடங்கள் |
| மோட்டார் சைக்கிள்கள் | 02 | 03 வருடங்கள் |
| குளிரூட்டிகள் | 03 | 03 வருடங்கள் |

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

---

மாவட்ட செயலகம் இரண்டு வாகனங்களை முறையற்றவாறு வெளித்தரப்பினர்களுக்கு விடுவித்திருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

| **வாகனத்தின் வகை** | **சொத்துக்கள் வழங்கப்பட்ட தரப்பினர்** | **காலப்பகுதி** |
|---|---|---|
| பிக்கப் வாகனம் | மன்னார் நகர சபை | 07 வருடங்கள் |
| பிக்கப் வாகனம் | மாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மன்னார் | 04 வருடங்கள் |

## 3.8 இணங்காமைகள்

---------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப் பிரமாணம் 94 | 512,177 | நிதி ஏற்பாட்டினை விஞ்சி பொறுப்புக்களுக்கான கடப்பாடுகள் ஏற்பட்டிருந்தன. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 136, 137, 138 மற்றும் 139 | 3,037,422 | இருபது கொடுக்கல்வாங்கல்கள் அங்கீகாரம், அனுமதி மற்றும் சான்றுறுதிப்படுத்துதல் என்பவற்றைக் கொண்டிராது செலுத்தப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப் பிரமாணம் 371 | 65,000 | பல்வேறு வேலைகளிற்காக கொடுக்கப்பட்ட நான்கு முற்பணங்கள் உரிய வேலைகளிற்காக பயன்படுத்தப்படாமல் 58 நாட்கள் முதல் 94 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் முழுமையாக தீர்வு செய்யப்பட்டிருந்தன. |
| | 421,260 | தற்காலிக முற்பணங்கள் 25 நாட்கள் முதல் 111 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்வு செய்யப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| | 618,000 | 8 உத்தியோகத்தர்களிற்கு அவர்களுக்காக கொடுக்கப்பட்ட முன்னைய முற்பணங்கள் தீர்வுசெய்யப்படாமல் 57 சந்தர்ப்பங்களில் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (iv) நிதிப் பிரமாணங்கள் 880 மற்றும் 881 | 428,500 | மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களில் சேவையிலுள்ள 46 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.9 முகாமைத்துவப் பலவீனங்கள்

-------------------------------------------------

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட 03 நிர்மாண வேலைகள் தொடர்பில் தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு மாவட்டச் செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| நிர்மாணத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை | பூர்த்தியாக்கப்பட வேண்டிய திகதி | கால தாமதமான நாட்கள் | கால தாமதங்களிற்காக அறவிட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| | ரூபா. | | | ரூபா. |
| மறிச்சிக்கட்டியிலுள்ள உள்ளக வீதி | 7,587,132 | 2013.12.31 | 8 மாதங்களும் 10 நாட்களும் | 758,713 |
| கரடிக்குளியிலுள்ள உள்ளக வீதி | 7,544,611 | 2013.12.31 | 8 மாதங்களும் 10 நாட்களும | 754,461 |
| பழக்குளியிலுள்ள உள்ளக வீதி | 7,625,729 | 2013.12.31 | 11 மாதங்களும் 20 நாட்களும | 762,573 |

## 3.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான பதவியணி |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 18 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 17 | 01 | 16 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 349 | 264 | 85 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 56 | 37 | 19 | - |
| (v) | ஏனையவை (அமைய மற்றும் தற்காலிகம்) | - | 19 | - | 19 |
| | **மொத்தம்** | **444** | **339** | **124** | **19** |

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 124 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆட்சேர்க்கப்பட்ட அமைய மற்றும் தற்காலிக பதவியணியினருக்காக முறையான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.